## ரிதீமாலியத்த பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுன் 15 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜுன் 19 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, ரிதீமாலியத்த பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

-----------------------------------------------------------------------------

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 25 ஆம் பந்தியின் பிரகாரம், ஏதேனும் சொத்தொன்று பரிமாரப்படாத கொடுப்பனவு ஒன்றின் மூலம் உரித்தாக்கப்பட்டிருந்த பின், அதனது கிரயம் உரித்தாக்கிய தினத்தில் உள்ளவாறு நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட வேண்டும் எனினும் சபைக்கு கிடைத்திருந்த 04 சொத்து விடயங்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,237,000 இற்கான நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்யாமையால் நிலையான சொத்துக்கள் கணக்கின் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 1,237,000 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலைகளுக்கான 10% தடுத்து வைத்தல் பணம் ரூபா 357,503 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் நிகழ்ச்சித் திட்டத்தை சேர்ந்த 25 செயற்திட்டங்களுக்காக திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன் கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் ரூபா 7,468,250 இனால் கடன் கொடுத்தோர் மற்றும் கடன் பட்டோரின் பெறுமதிகள் குறைவாக நிதிக் கூற்றுக்களால் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 6,005,766 இற்கான நிலுவை மூலதன உதவியில் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட 08 நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 293,936 இற்கான முற்பணத் தொகையும் அடங்கியுள்ளது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------

நான்கு கணக்கு விடயங்கள் தொடர்பாக துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 4,051,851 ஆக காணப்பட்டதுடன் நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 3,087,511 ஆகும்.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 9,067,500 ஆக காணப்பட்டதுடன் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 8,601,084 ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

ரூபா 26,931,853 பெறுமதியான கணக்கு விடயம் ஒன்று தொடர்பாக காணி உறுதிகள் மற்றும் உரித்தாக்கல் கட்டளை சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதுள்ளது.

1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132(ஔ) | உள்ளுராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி முன்பள்ளிகளுக்காக 07 சந்தர்ப்பங்களில் ரூபா 171,057 தொகை ஒன்று செலவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி பிரிவுகள் 14 மற்றும் 127 | 09 செலவு விடயங்களின் கீழ் ரூபா 658,086 தொகை ஒன்று ஏற்பாடுகளை மிகைத்து செலவிடப்பட்டிருந்ததுடன் அதற்காக குறைநிரப்பு செலவு மதிப்பீடு ஒன்று சமர்பித்து சபையின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br>--------------------------------------------------------------<br>- | |
| | (i) நிதிப் பிரமாணம் 571 | வைப்புச் செய்து 02 வருடங்களில் உரிமை கோறப்படாது காணப்பட்ட ரூபா 24,133 பெறுமதியான 05 வைப்புக்களை உரிமையளிப்பு செய்திருக்கவில்லை. |
| | (ii) நிதிப் பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு 06 மாதங்களை கடந்துள்ள கொடுப்பனவுக்காக வங்கிக்குச் சமர்பிக்கப்படாத ரூபா 25,826 பெறுமதியான 06 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை குடியரசின் தாபன கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 1.6 | சபையில் கடமையாற்றிவிட்டு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 11 ஊழியர்களிடம் 02 வருடம் முதல் 34 வருட காலம் வரை அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 50,128 இற்கான பதவியணிக் கடனை அறவீடு செய்திருக்கவில்லை. |

2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,356,498 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,291,192 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 65,306 இற்கான அனுகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 452,822 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 759,106 என்பன கிடைக்க வேண்டியுள்ளது.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

------------------------------------------------

3.1.1 ஒப்பந்த நிருவாகம்

------------------------------

மீளாய்வாண்டின போது உள்ளூராட்சி திணைக்களத்தில் வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் கிராமிய நுழைபாதை அபிவிருத்தி, கிராமிய பாலங்கள் நவீனமயப்படுத்தல் மற்றும் புதிதாக பாலங்கள் நிர்மாணித்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டு 2014 ஆண்டின் போது முற்பணம் செலுததுவதற்கான பணம் வழங்கியுள்ள கூட்டுத்தொகை ரூபா 1,016,045 இற்கான 07 நிர்மாண வேலைகளுக்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையும் உடன்படிக்கை கைச்சாத்திட்டு இருக்கவில்லை.

3.1.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

----------------------------------------------------

3.1.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

--------------------------------------------------------------------

சபையினால் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சபையினால் சேகரிக்கப்படும் குப்பைகள் ஆந்தாஉல்பத்த சந்தை வளவில் முறையற்றவிதமாக குவிக்கப்பட்டு காணப்பட்டது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) ஒப்பந்த நிருவாகம்